APPOLLO STUDY CENTRE

# TNPSC GROUP II/IIA MAIN EXAM 2025

## MODEL EXAM

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**Total Marks: 100** **Time : 3 hrs**

**கேள்வி எண் 1** **10 மதிப்பெண்கள்**

1. **பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

கி.மு. (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழ்ப் பண்பாடு தோன்றிவிட்டது. தமிழகத்து வணிகர்களும் கடலோடிகளும் கடல் கடந்த நாடுகளுடன் வணிகத் தொடர்புகளையும் பண்பாட்டுத் தொடர்புகளையும் கொண்டிருந்தனர். வெளிநாட்டு வணிகர்கள் கடல்வழியே தமிழகத்திற்கு வந்துபோயினர். வெளிநாட்டினருடன் ஏற்பட்ட பண்பாட்டுத் தொடர்புகளும், வணிக நடவடிக்கைகளும், தமிழகத்தின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும் வாழக்கைமுறைகளும் இணைந்து தமிழ்நாட்டில் முதல் நகரமயமாதல் உருவானது. தலைநகரங்களும் துறைமுகப்பட்டினங்களும் தோன்றின. நாணங்களும் பணமும் புழக்கத்திற்கு வந்தன. “தமிழ் பிராமி“ என்ற வரிவடிவத்தில் தமிழ் மொழி முதன் முதலில் எழுதப்பட்டது. ஆவணங்கள் உருவாக்கப்பட்டன. செம்மொழித் தமிழ்ச் செய்யுள்கள் இயற்றப்பட்டன.

**கேள்வி எண் 2:** **10 மதிப்பெண்கள்**

2. **பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

Tholkappiyam, attributed to Tholkappiyar, is the earliest written work on Tamil grammar. Apart from elaborating the rules of grammar, the third section of Tholkappiyam alsodescribes poetic conventions that provide information on Tamil social life.The texts of Pathinen Melkanakku include Pathupaattu (ten long songs) and Ettuthogai (the eight anthologies). These texts are the oldest among the classical Tamil texts. The texts of Pathinen Kilkanakku belong to a later date.

**கேள்வி எண் 3:** **10 மதிப்பெண்கள்**

3. **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

உலகையே அதிரவைக்கும் DeepSeek AI சமீபத்திய நாட்களில் அதிகளவில் பேசப்படும் செய்தியாகிவிட்டது. இதனால், அமெரிக்க உள்ளிட்ட நாடுகளில் ஏஐ துறையில் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந்த வகையில், நேற்று இந்திய பங்குச் சந்தைகளும், அமெரிக்க பங்குச் சந்தைகளிலும் ஏஐ பங்குகளில் மிகப்பெரிய சரிவு காணப்பட்டது. இதற்கிடையில், நீங்கள் இந்த டீப்சீக் ஏஐ பயன்படுத்தினால் உங்களுக்கு ஆபத்து வர இருக்கிறது.

சீனாவின் செயற்கை நுண்ணறிவு நிறுவனமான டீப்சீக் உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது உலகின் மிகப்பெரிய ஏஐ மாடல்களான OpenAI இன் ChatGPT மற்றும் செமிகண்டக்டர் சிப் தயாரிப்பாளரான என்விடியாவையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

டீப்சீக் ஏஐ இன் சாத்தியம் சிறப்பானது. ஆனால் மற்ற சீன தயாரிப்புகளைப் போலவே, இது குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. டீப்சீக் இன் தனியுரிமைக் கொள்கை மக்களின் கவலையை அதிகரித்து வருகிறது. ஏஐ சாட்போட்களை தங்கள் தொலைபேசிகள் அல்லது பிற சாதனங்களில் பயன்படுத்துபவர்கள் டீப்சீக்கை பயன்படுத்தினால், பதற்றத்தை அதிகரிக்கக்கூடும்.

அந்த வகையில், ஒருவர் டீப்சீக் டவுன்லோடு செய்து அதன் தனியுரிமைக் கொள்கை திறந்தவுடன், முதலில் தோன்றும் அதன் பதிவுத் தகவல். இது சீனாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது உங்கள் தனிப்பட்ட தரவை சேகரிக்க முடியும். பெயர், பிறந்த தேதி, மொபைல் எண், கடவுச்சொற்கள், அரட்டை வரலாறு போன்றவை இதில் அடங்கும்.

இதற்குப் பிறகு, சேகரிக்கப்படும் பயனர்களின் தனிப்பட்ட தகவல்களை நாடு எதுவாக இருந்தாலும் நிலையான சர்வரில் சேமிக்கலாம் என்று தனியுரிமைக் கொள்கையில் எழுதப்பட்டுள்ளது. அதாவது உங்கள் தகவல்கள் சீனாவில் அமைந்துள்ள சர்வர்களில் சேமிக்கப்படுகிறது.

டீப்சீக் காரணமாக என்விடியா பெரும் நஷ்டத்தை சந்திக்க நேரிட்டது. இதையும் மீறி சீனாவின் இந்த டீப்சீக்கை அந்நிறுவனம் பாராட்டியது. அதில் டீப்சீக்கின் R1 யுஐ மாடல் எல்லா இடங்களிலும் கிடைக்கும் என்று கூறினார். இது ஆப்பிள் ப்ளே ஸ்டோரில் டிரெண்டாகத் தொடங்கியுள்ளது. இது குறைந்த விலையில் கிடைக்கிறது. இதனுடன், நிறுவனம் சந்தேகம் தெரிவித்ததுடன், டீப்சீக் ஏஐ சீனாவில் இருந்து இயங்குகிறது. எனவே அது அங்குள்ள விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் கூறியது. எனவே, அங்குள்ள தகவல்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். எனவே இது மற்ற நாடுகளில் நீக்கப்படலாம்.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை அண்ணா படைத்துள்ளார். இவற்றில் 7 சிறுகதைகள் வரலாற்றுச் சிறுகதைகள் ஆகும். அண்ணாவின் சிறுகதைகள் அனைத்திலும் சமுதாய விடுதலை உணர்விற்கான விழிப்புணர்வைக் காண முடிகிறது. வரலாற்றுச் சிறுகதைகளில் மன்னர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்கும், சூழ்ச்சிக்கும் காரணங்களை வெளிப்படுத்தும் முயற்சிகளைக் காண்கின்றோம். அத்தகைய நூல்களில் ஒன்றுதான் திருமலைநாயக்கர் மன்னர் பற்றி எழுதிய திருமலைகண்ட திவ்யஜோதி என்ற படைப்பாகும். சமுதாயச் சிறுகதைகளில் பொருளாதார ஏற்றத் தாழ்வு, வறியவர் உழைப்புச் சுரண்டப்படுதல், பெண்களின் அவலநிலை, இடைத்தரகர்களின் தன்னலப் போக்கு ஆகியவற்றை எடுத்துரைக்கக் காண்கிறோம். பொருளாதாரச் சமநிலையே ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் உருவாக வழிகாட்டும் என்பதை அண்ணா வலியுறுத்துவதைக் காண முடிகிறது. பெண்கள் துணிவு மிக்கவர்களாக வாழ வேண்டும், அவர்களுடைய உரிமைக்கு அவர்களே குரல் கொடுக்க வேண்டும் என்ற அண்ணாவின் நோக்கத்தை அவருடைய சிறுகதைகளில் காணமுடிகிறது.

"உத்தி, உள்ளடக்கம், நடை ஆகிய அம்சங்களில் முழுமையாக அமைந்த பல சிறுகதைகளைப் படைத்த அண்ணா, மணிக்கொடிக்கு அடுத்த காலத்தும் இந்தத் துறையை வளர்க்க உதவிய ஆசிரியர்களில் ஒருவர்" என்கின்றனர் சிட்டி மற்றும் சிவபாத சுந்தரம்.

அண்ணா தம் சிறுகதைப் படைப்புகளில் சாதி பெற்றுள்ள ஆதிக்கம், அதனால் ஏற்படும் சீர்கேடுகள், மூட நம்பிக்கையால் தன்னம்பிக்கை இழந்து சாதகம், சோதிடம் என்று அலையும் மக்களின் அவல வாழ்வு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றார். அடுக்கு மொழியும், கேலியும், கிண்டலும், வாதத்திறமையும் கொண்டது இவர் மொழி நடை. பண்பட்ட நகைச்சுவை இவருடைய சிறுகதைகளில் வெளிப்படக் காணலாம். அறிவுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகள் அழிய வேண்டும் என்பதை வலியுறுத்துவன இவர் சிறுகதைப் படைப்புகள், கலப்பு மணம், விதவை மணம், சுயமரியாதைத் திருமணச் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தத் தூண்டுவனவாக அமைந்தவை. தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் அண்ணா தமக்கெனத் தனியிடத்தைப் பெற்று விளங்குகிறார் எனலாம்.

1. அண்ணா எத்தனை வரலாற்றுச் சிறுகதைகளைப் படைத்துள்ளார்?

2. திருமலை நாயக்க மன்னரைப் பற்றி எழுதப்பட்ட வரலாற்றுச் சிறுகதை எது?

3. சிட்டி மற்றும் சிவபாத சுந்திரம் அண்ணா பற்றி கூறுவது யாது?

4. அண்ணாவின் சிறுகதைகள் எதனை வலியுறுத்துகின்றன?

5. பெண்கள் குறித்து அண்ணாவின் நோக்கம் யாது?

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

**சங்ககாலம் ஒரு வாழ்வியல் பொற்காலம் - வீரம் - கொடை – அறநெறி போற்றல் - பிறர்க்கென வாழ்தல்**

**கேள்வி எண் 6:** **15 மதிப்பெண்கள்**

**6. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. சமய நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திருக்குறள் விளங்குவதை எடுத்துரைக்க.
2. உயிர்கள் மீது அன்பு கொள்வதை அருளுடைமை வழி வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?
3. வாழ்வின் உண்மைகளை உணர்தல் எனும் நிலையினை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
4. திருவள்ளுவரின் கல்விச் சிந்தனைகள்' – கட்டுரைக்க.
5. 'வளமான வாழ்க்கைக்கு வள்ளுவம்' – கூறும் வழிமுறைகளைச் சான்றுடன் விளக்குக.

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம் (ஏதேனும் ஒன்று)**

1. வனம் - வன உயிரினம் - விவசாயிகள் - வன உயிரின முரண்களைத் தவிர்ப்பதற்காக அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவின் பரிந்துரைகளின் மீது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒரு அரசாணை வரைக
2. மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ் பயனடைந்த மக்கள் குறித்த விவரங்களை வட்டாட்சியர் சேகரித்துத் தலைமைச் செயலருக்கு அனுப்பக் கோரும் அலுவலக ஆணைக் கடிதம் வரைக.
3. செம்மொழி பூங்காவை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் குறித்த திட்ட மதிப்பீட்டை செய்க.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. மேதினி
2. நிலம்
3. தென்றல்
4. சித்தம்

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. சண்டை சச்சரவு
2. ஏனோதானோ
3. ஆண்டான் அடிமை
4. ஊண் உறக்கம்

**c. பிரித்து எழுதுக**

1. வையெட்டும்
2. நன்றியறிதல்
3. பொறையுடைமை
4. பாட்டிசைத்து

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. கங்காதரன் எளியவர்க்கு இரங்கினான்
2. காந்தி அவர்களை அனைவரும் அறிவர்

APOLLO STUDY CENTRE

3. மணிமேகலை முதல் பரிசு பெற்றாள்

4. வயலில் ஆடுகள் மேய்ந்தன

**e. பிழை நீக்கி எழுதுக**

1. உப்பிட்டவரை உள்ளளவும் நிணை.

2. பசு கன்றை ஈன்றன

3. பூப்பறிக்க நேரமாகிவிட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள்

4. பகைவர் நீவீர் அல்லர்

APPOLO STUDY CENTRE